**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

ஹமாஸ்-இஸ்ரேல் போர்

# பொதுமக்கள் உயிரிழப்புக்கு இந்தியா கண்டனம்

**புது தில்லி, நவ. 17:** ஹமாஸ் – இஸ்ரேல் இடையிலான போரில் பொதுமக்கள் உயிரிழப்பதை இந்தியா வன்மையாக கண்டிக்கிறது என்று பிரதமர் மோடி கூறினார்.

'மேற்கு ஆசியாவில் நிகழும் சம்பவங்களால் புதிய சவால்கள் உருவாகி வருகின்றன; உலகளாவிய நன்மைக்காக, தெற்குலக நாடுகள் ஒருமித்த குரலில் பேசவேண்டிய நேரமிது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் ஏற்பாட்டில் 'தெற்குலகின் குரல்' இரண்டாவது மாநாடு வெள்ளிக்கிழமை இணையவழியில் நடைபெற்றது. பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் பிரதமர் மோடி நிகழ்த்திய தொடக்க உரை வருமாறு:

உலகின் வளமைக்கு 'அனைவருடன் ஒருங்கிணைந்து, அனைவருக்கான வளர்ச்சி' என்ற அணுகுமுறை அவசியம். இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பில், தெற்குலக நாடுகள் மற்றும் இதர வளரும் நாடுகள் எதிர்கொண்டுவரும் சவால்களுக்கு தீர்வுகாண பெருமளவில் கவனம் செலுத்தப்பட்டது.

இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்த இந்தியா, தற்போதைய சூழலை எதிர்கொள்வதற்கான பேச்சுவார்த்தை மற்றும் தூதரக நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தியது. ஹமாஸ்-இஸ்ரேல் போரில் குடிமக்கள் உயிரிழப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

**'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்':** பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸுடன் நான் அண்மையில் பேசினேன். இதைத் தொடர்ந்து பாலஸ்தீன மக்களுக்காக இந்தியாவில் இருந்து மனிதாபிமான உதவிகள் அனுப்பப்பட்டன. உலகின் மிகப் பெரிய நன்மைக்காக தெற்குலக நாடுகள் ஒருமித்த குரலில் பேசவேண்டிய நேரம் இதுவாகும்.

'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதே ஜி20 இந்தியத் தலைமையின் கருத்துருவாக இருந்தது. அதை அடைய வேண்டுமெனில், ஆலோசனை, ஒத்துழைப்பு, தகவல் தொடர்பு, படைப்பாற்றல், திறன் கட்டமைப்பு ஆகிய ஐந்து அம்சங்களின் கீழ் அனைத்து நாடுகளும் பிணைப்பை வலுப்படுத்த வேண்டும்.

**தனித்துவமான தளம்:** தற்போதைய 21-ஆம் நூற்றாண்டில் மாறிவரும் உலகுக்கான தனித்துவ தளமாக 'தெற்குலகின் குரல்' முன்னெடுப்பு விளங்குகிறது.

இந்தியாவின் ஜி20 தலைமையில், தெற்குலகுக்குப் பலனளிக்கும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைவரையும் உள்ளடக்கிய, மக்களை மையமாக கொண்ட ஜி20 கூட்டமைப்பை உருவாக்குவதே இந்தியாவின் முன்னுரிமையாக இருந்தது. மக்களால், மக்களுக்காக, மக்களே முன்னெடுக்கும் வளர்ச்சியை உறுதி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. இதே நோக்கத்துடன் 'தெற்குலகின் குரல்' முதலாவது மாநாடு கடந்த ஜனவரியில் நடத்தப்பட்டது.

ஜி20 பிரகடனத்தில் தெற்குலக பிரச்னைகள் தொடர்பான விவகாரங்களில் உறுப்பு நாடுகள் இடையே கருத்தொற்றுமையை ஏற்படுத்துவதில் இந்தியா வெற்றி கண்டுள்ளது. இந்தியாவின் முயற்சியால், ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியம் இணைந்த வரலாற்றுத் தருணத்தை மறக்க முடியாது.

**தொழில்நுட்பப் பயன்பாட்டில் பொறுப்பு:** தற்போதைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப யுகத்தில், தொழில்நுட்பத்தின் பொறுப்பான பயன்பாடு அவசியம். தெற்குக்கும் வடக்குக்கும் இடையிலான விரிசலை அதிகரிக்கக் கூடிய ஆதாரமாக புதிய தொழில்நுட்பங்கள் உருவெடுத்துவிடக்கூடாது என்றார் பிரதமர் மோடி.

காஸாவில் இருந்து கடந்த மாதம் 7-ஆம் தேதி இஸ்ரேல் மீது பலமுனைகளில் தாக்குதல் நடத்திய ஹமாஸ் ஆயுதக் குழுவினர், சுமார் 1,400 பேரை படுகொலை செய்தனர். மேலும் பலரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, காஸாவுக்குள் நுழைந்து இஸ்ரேல் ராணுவம் மிகப் பெரிய ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கையில் காஸாவில் சுமார் 11,500 பேர் உயிரிழந்துவிட்டதாக ஹமாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'தெற்குலகின் குரல்' மாநாட்டில் பிரதமர் மோடி



## 'ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் தவறான பயன்பாட்டால் பிரச்னை'

**புது தில்லி, நவ. 17:** 'செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தின் மூலம் போலியான காணொலிகள் உருவாக்கப்படுவது சமூகத்தில் பெரும் பிரச்னைக்கு வழிவகுக்கும்' என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

தில்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை தீபாவளி கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது ஊடகத்தினரிடம் பேசிய பிரதமர் மோடி, 'கர்பா நிகழ்ச்சியொன்றில் நான் பாடுவது போன்ற காணொலியை அண்மையில் பார்த்தேன். பள்ளி நாள்களில்கூட நான் அவ்வாறு பாடியது இல்லை.

பன்முக சமூகத்தைக் கொண்ட நமது நாட்டில், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்படும் போலியான காணொலிகள் பெரும் பிரச்னைக்கு வழிவகுக்கக் கூடும். இந்தத் தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்து பொதுமக்களிடம் ஊடகத்தினர் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்' என்றார்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இந்திராவின் வாழ்க்கைப் பயணம் - ஓர் ஆய்வு!

இந்தியத் தலைவர்களின் மக்கள் செல்வாக்கை அளவிடும் சிந்தனையாளர் மன்றம் 2006-இல் நடத்திய ஆய்வின்படி அதிகமாக அறியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தலைவர் அண்ணல் காந்தி அடிகளே; அவருக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தைப் பிடிப்பவர் இந்திரா காந்தி தான். அவரின் தந்தை பண்டித ஜவாஹர்லால் நேருகூட மூன்றாம் இடத்தைத்தான் பிடிக்கிறார்.

இந்திரா காந்தி ஒரு வித்தியாசமான அரசியல் தலைவர். அண்ணல் காந்திஜி 'எனக்கு இலட்சியத்தைவிட அதை அடைவதற்கான வழிமுறையே முக்கியம்' என்றார். ஆனால், இந்திரா காந்தியோ 'எனக்கு ஏற்றுக் கொண்ட இலட்சியமே முக்கியம்; வழிமுறை இரண்டாம் பட்சம்' என்று எண்ணிச் செயல்பட்டவர்.

'சக தலைவர்களிடம் கருத்துக் கேட்டல், கலந்துரையாடல், கருத்தொற்றுமை உருவாக்குதல், காரியமாற்றல் - என்பதே என் தந்தை நேருஜியையான அணுகுமுறை. இது காலதாமதத்துக்கு இடம் தந்தது; நினைத்ததை நிறைவேற்றுவதற்கு மூத்த தலைவர்கள் முட்டுக்கட்டை போட்டார்கள். இந்த அணுகுமுறை எனக்கு ஏற்புடையதல்ல' - என்று மூத்த வெளிநாட்டு பத்திரிகையாளரிடம் எரிச்சலுடன் பதிவு செய்துள்ளார் இந்திரா காந்தி.

மனசாட்சியின் அடிப்படையில் தன் மனத்தின் உத்தரவுப்படி செயல்பட்டார் மகாத்மா. அரசியல் சகாக்களின் ஆலோசனையை கேட்டுச் செயல்பட்டார் நேருஜி. நம்பிக்கைக்குரிய நல்ல அறிவாற்றல்மிக்க மூத்த அரசு அதிகாரிகளின் ஆலோசனைகள் பெற்று செயல்பட்டார் இந்திரா. இவ்வாறு காந்திஜி, நேருஜி இருவரின் அணுகுமுறையிலிருந்தும் மாறுபட்டு நின்றார்.

இந்த வித்தியாசமான அணுகுமுறையை மக்கள் வரவேற்கத் தொடங்கினர். நீங்கள் யாரிடமிருந்து உணர்வும், உத்வேகமும் பெறுகிறீர்கள் என்று ஒரு நிருபர் கேட்டபோது 'நான் சந்திக்கும் ஏழை மக்களிடமிருந்து...' எனப் பதில் சொன்னார்.

அவருக்கென்று சில சாதகமான பின்னணியும் இயற்கையாகவே அமைந்திருந்தன. அரசியல் நுணுக்கம் அவரிடம் ஆழ்ந்து கிடந்தது. அச்சம் அவர் அறியாதது. துணிவே அவருக்குத் துணை நின்றது. தோற்றப் பொலிவு அவருக்கு இறைவன் தந்த வரம். இயற்கையில் அவர் ஒரு நல்ல மேடைப் பேச்சாளர் அல்லர்; ஆனால், மக்களை வசீகரிக்கும் பேச்சாற்றலை காலப் போக்கில் வளர்த்துக் கொண்டார்.

தேச பக்தியும், தெய்வ பக்தியும் நிரம்பியவர். தந்தை நேரு சமயநம்பிக்கை இல்லாதவர். ஆனால், இந்திராஜி ஹிந்து மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் என்றாலும், தன்னை ஒரு சமயச் சார்பற்றவராகவே நிலைநிறுத்திக் கொண்டார். அரசியல் ஆதாயத்துக்காக சமயச் சார்புடைய இயக்கங்களுடன் அவர் சமரசம் செய்து கொண்ட நிகழ்வுகள், அவரின் அரசியல் எதிரிகளை வியப்புக்குள்ளாக்கின.

தனது ஒரே இலட்சியம் வலிமையான, தற்சார்புடைய, எந்த அணியையும் ஆதரிக்காத நடுநிலைக் கொள்கையை உடைய தேசத்தை உருவாக்குவதே என்பதை மக்கள் மனதில் பதியவைத்தார். நெருக்கடி நேரும் போது சோவியத் யூனியன் பக்கம் சாயவும் செய்தார். காரணம் வெற்றிக்கு அதுவே வழி என்றார்.

இந்திரா காந்தியின் வாழ்க்கைபயணம் ஏழு காலகட்டங்களை உள்ளடக்கியது. முதல் 30 ஆண்டுகாலம், 1917 முதல் 1947 வரை - அழகிய ஆனந்த பவனில் வளர்ந்த பெருமை, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற இயலவில்லையே என்ற ஏக்கம், தன் தந்தையைப் பார்க்க வரும் தேசத் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பால் கிட்டிய மகிழ்ச்சி, தான் பெரிதும் மதித்த தந்தை ஜவாஹர்லாலின் விருப்பத்துக்கு மாறாக ஃபெரோஸ் காந்தியை மணக்க சுயமாக எடுத்த தவறான முடிவு - ஆகியவற்றை உள்ளடக்கியது.


முனைவர் அபிச்சை



**இந்திய தேசத்தின் தலைசிறந்த பிரபலமான அரசியல் தலைவர் இந்திரா காந்தி என்பதைத்தான் ஊரும் உலகும் அறியும். ஆனால், அடிப்படையில் அவர் ஓர் ஆன்மிகவாதி; ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை கொண்டவர்; ஆரிய சமாஜத்தைப் பின்பற்றும் ஹிந்து மத நம்பிக்கையாளர்.**

1947 முதல் நேருஜி மறையும் 1964 வரை தன் தந்தைக்கு உதவியாளராக, பணியாளராக, பாதுகாவலராக, அரசியல் நிகழ்வுகளை அறிந்துகொள்ளும் அரிய வாய்ப்பு பெற்றவராக, தன் தந்தையின் விருப்பத்துக்கு எதிராக 1959-இல் காங்கிரஸ் தலைவராக உயரும் வாய்ப்பு நிறைந்தது இரண்டாம் காலகட்டம்.

1964 முதல் 1966 வரை லால்பகதூர் சாஸ்திரியின் அமைச்சரவையில் அமைச்சராக, வேண்டா வெறுப்பாகப் பணிபுரிந்தது மூன்றாவது காலகட்டம்.

1966 முதல் 1971 வரை பிரதமராக, மூத்த காங்கிரஸ் தலைவர்களை, பிராந்திய தலைவர்களைப் புறக்கணித்து, கட்சியை உடைத்து புதிய காங்கிரஸை உருவாக்கியது நான்காவது காலகட்டம்.

1971 தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றி, பாகிஸ்தானோடு போர் தொடுத்து வங்காள தேசத்தை உருவாக்கிய சாதனை அவரின் புகழை இமய உச்சிக்கு உயர்த்தினாலும், அவசரநிலைப் பிரகடனத்தை அமல்படுத்தியதால் மக்கள் செல்வாக்கை இழந்து, 1977 பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவி, பதவியை இழந்தது ஐந்தாவது காலகட்டம்.

பொறுப்பேற்ற புதிய அரசால், விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு, குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு இத்துடன் அவரது அரசியல் வாழ்க்கை முடிந்தது என்று பிறர் எண்ணிய இருண்டகாலம்தான் அவரது வாழ்வின் 1977 முதல் 1980 வரையிலான ஆறாவது காலகட்டம்.

ஃபீனிக்ஸ் பறவை வீறுகொண்டு எழுந்தது போல 1980-இல் மீண்டும் தேர்தலில் வென்று, 'ஆளப்பிறந்தவர் நானே' என அறிவித்து பிரதமராக அமர்ந்து, பொற்கோவிலுக்குள் அஞ்சாது படை நடத்தி, அதன் காரணமாக அவரது பாதுகாவலர்களாலேயே படுகொலைக்கு உள்ளானது 1980-1984 வரையிலான ஏழாவது காலகட்டம்.

இவ்வாறு அவரின் வாழ்க்கை ஏற்றம், இறக்கம், இன்பம், துன்பம், எழுச்சி, வீழ்ச்சி, புகழ்ச்சி, இகழ்ச்சி, அமோக ஆதரவு, அதிகமான எதிர்ப்பு என்று வேறு எந்த இந்தியத் தலைவரும் எதிர்கொள்ளாத நிலைமைகளை உள்ளடக்கியவை! அவற்றை அவர் எதிர்கொண்ட வீரமும், தீரமும் வியப்புக்குரியதே!

இந்திய தேசத்தின் தலைசிறந்த பிரபலமான அரசியல் தலைவர் இந்திரா காந்தி என்பதைத்தான் ஊரும் உலகும் அறியும். ஆனால், அடிப்படையில் அவர் ஓர் ஆன்மிகவாதி; ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை கொண்டவர்; ஆரிய சமாஜத்தைப் பின்பற்றும் ஹிந்து மத நம்பிக்கையாளர்; அதே சமயம் பிற மதங்களின் வழிபாட்டு முறைகளையும் மதித்தவர்; அவற்றின் மீதும் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர். மசூதி, தேவாலயங்களுக்கும் சென்று வழிபடும் பழக்கம் கொண்டவராக வாழ்ந்தவர்.

அவரது மூதாதையர் முதல்கொண்டு வழிபட்டு வந்த குலதெய்வம் காஷ்மீரில் திசார் என்ற மலை உச்சியில் உள்ளது. 'சரிகா தேவி' என்று அழைக்கப்படும் அந்தக் காளியம்மன் 16 கைகளைக் கொண்டதாம். ஆண்டுதோறும் அந்தக் கோயிலுக்குச் சென்று வழிபடுவதையும் வரம் பெற்று வருவதும் அவரின் வழக்கம்.

அவர் 1984 அக்டோபர் மாதம் காஷ்மீர் செல்கிறார். அவருடன் எம்.எல். ஃபோட்டேதாரை அழைத்துச் செல்கிறார். 150 அடிகள்/ படிகள் நடந்து, மலை உச்சியில் அம்மன் கோவிலை அடைகிறார். அங்கு அமர்ந்திருக்கும் சுவாமி லட்சுமண ஜூ என்ற அருள்சக்தி வாய்ந்த துறவி முன்னால் அமர்ந்து 2 மணிநேரம் கண்ணை மூடிக்கொண்டு வழிபடுகிறார்.

வழிபாடு முடிந்த பின்னர், சுவாமிஜியை குனிந்து வணங்குகிறார். சுவாமிஜியோ, தன் கையால் பிரசாதத்தை எடுத்து, இந்திராவின் கையில் போடுகிறார். ஆனால், இந்திராவின் கையில் பிரசாதம் விழாமல், தவறுதலாக தரையில் விழுந்துவிட்டது; அது கண்டு இந்திரா திகைத்தார். சகுனம் சரியில்லையே! அன்னை காளிதேவியின் ஆசீர்வாதம் கிடைக்கவில்லையே என கலங்கினார்.

அதன்பின்பு அவர் நம்பி வழிபடும் இஸ்லாமிய தர்காவுக்கு 130 படிகள் ஏறிச் சென்றார். தர்கா அருகில் சென்ற போது தர்காவின் தலைவர் மக்தூம் சாகேப் அம்மா தர்காவில் துதி நேரம் முடிந்து விட்டது. மசூதியில் வழிபாட்டு அரங்கு மூடப்பட்டுவிட்டது என்றாராம். அது கேட்டு இங்கும் எனக்கு இறை அருள் கிடைக்கவில்லையே என ஏங்கிக் கலங்கி, ஃபோட்டேதாரிடம் வருந்திப் பேசினாராம்.

'ஃபோட்டேதார், இன்று எனக்கு நல்ல நாள் இல்லை! நான் இனி நீண்ட நாள் வாழ்வேன் என்ற நம்பிக்கை இல்லை; என் இறுதிக்காலம் நெருங்கிவிட்டது. அதற்காக நான் வருந்தவில்லை. ஆனால், நான் இறைவனிடம் வேண்டுவது ஒரே வரம்தான். வயது முதிர்ந்த நிலையில் என் தந்தை நேருஜியைப் போல் படுக்கையில் விழுந்து, வலியாலும், வேதனையாலும் வருந்தித் துடித்து நான் சாகக்கூடாது. மாறாக, இப்படி நான் நடந்து செல்லும் போதே திடீரென்று தரையில் விழுந்து மரணிக்க வேண்டும்' என்றாராம்.

'அம்மா! அப்படி எல்லாம் நீங்கள் நினைக்கக்கூடாது. நடக்கவும் நடக்கக்கூடாது' என்றாராம் ஃபோட்டேதார்.

இது நடந்தது 28.10.1984 அன்று. அவர் மரணத்தை எதிர் கொண்டது 31.10.1984 அன்று.

இப்படி ஆன்மிக உணர்வுமிக்க, அற்புதமான உள்ளுணர்வு கொண்ட மங்கையாக, அதிசயத் தலைவராக வாழ்ந்து மறைந்தவர் தான் அன்னை இந்திரா காந்தி! அண்ணல் காந்திக்கு உள் உணர்வு வழிகாட்டியது! அன்னை இந்திராவுக்கும் அப்படி ஓர் உள் உணர்வு வழிகாட்டி இருக்குமோ?

**நாளை (நவம்பர் 19)**
**இந்திரா காந்தியின் பிறந்த தினம்.**

கட்டுரையாளர்:
**காந்திய சிந்தனையாளர்.**

# சாதனை நாயகன்!

கொல்கத்தாவில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான போட்டியில் சச்சின் டெண்டுல்கரின் 49 ஒருநாள் போட்டி சதத்தை விராட் கோலி எட்டியபோது, அது உருவாக்கிய எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. அடுத்த 10 நாள்களில் கிரிக்கெட் உலகக் கோப்பை அரையிறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் சதம் அடித்து சச்சின் சாதனையை முறியடித்திருக்கிறார் விராட் கோலி.

சச்சினின் சொந்த மைதானம் என்று கருதப்படும் மும்பையின் வான்கடே மைதானத்தில், சச்சின் முன்னிலையில் அந்த சாதனையை நிகழ்த்தியிருப்பது மேலும் சிறப்பு. சாதனை சதம் அடித்த அடுத்த நொடியில், பார்வையாளர்கள் பகுதியில் வீற்றிருந்த சச்சின் டெண்டுல்கரை மகிழ்ச்சியுடன் பார்த்து விராட் கோலி தலை வணங்கியதும், சச்சின் டெண்டுல்கர் தன்னால் உருவாக்கப்பட்ட கிரிக்கெட் வாரிசை வாழ்த்தும் விதமாக மகிழ்ச்சிப் புன்னகை உதிர்த்ததும் கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் மறக்க முடியாத காட்சியாக உறைந்துவிட்டிருக்கிறது.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் இரண்டு காலகட்டங்களுடைய அடையாளங்களாக சச்சின் டெண்டுல்கரும், விராட் கோலியும் உயர்ந்து நிற்கிறார்கள். சச்சின் டெண்டுல்கரை தன்னுடைய லட்சிய நாயகனாக (ரோல் மாடல்) தான் கருதுவதாகவும், ஒரு நாளும் அவருடன் ஒப்பிடும் தகுதி தனக்கு இல்லை என்றும் விராட் கோலி பலமுறை தெரிவித்திருக்கிறார்.

கடந்த முறை இந்தியா ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் உலகக் கோப்பையை வென்றபோது, சச்சின் டெண்டுல்கரை தனது தோள்களில் தூக்கி கொண்டாடிய விராட் கோலி, இப்போது அவரது தோளோடு தோள் சேர்ந்து நிற்கும் சாதனை நாயகனாக உயர்ந்திருக்கிறார். சர்வதேச கிரிக்கெட் பயணத்தின் கடந்த 15 ஆண்டுகளில் விராட் கோலி படைத்திருக்கும் சாதனைகள் ஏராளம், ஏராளம்.

தில்லியில் பிறந்த வலது கை ஆட்டக்காரரான 35 வயது விராட் கோலி, இதுவரை பங்குபெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் 291; விளையாடிய இன்னிங்ஸ்கள் 279; அதிகபட்ச ரன்கள் 183; ஒருநாள் போட்டியில் அடித்திருக்கும் ரன்கள் 13,794; சராசரி ரன்கள் 58.70; சதங்கள் 50; அரை சதங்கள் 71; 152 சிக்ஸர்களும், 1,290 பவுண்டரிகளும் அவற்றில் அடக்கம்.

சச்சினின் இன்னும் சில சாதனைகளையும் முறியடித்திருக்கிறார் விராட் கோலி. உலகக் கோப்பையின் ஒரு தொடரில் மிக அதிகமான ரன்கள் (711) எடுத்த சாதனையை குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒருநாள் கிரிக்கெட்டில் 50 சதங்கள் அடித்த சாதனை மட்டுமல்லாமல், அதை அடைந்த வேகமும்கூட இன்னொரு சாதனை.

ஒருநாள் கிரிக்கெட்டில் தனது 49 சதங்களை எட்ட சச்சின் டெண்டுல்கர் 452 இன்னிங்ஸ் விளையாடினார் என்றால், தனது 50 சதங்களை 279 இன்னிங்ஸில் விராட் கோலியால் எட்ட முடிந்திருக்கிறது. இரண்டும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விதமான பந்து வீச்சக்காரர்களை எதிர்கொண்டு பெற்ற ரன்கள் என்றாலும், கணக்கு என்று பார்த்தால் முன்னிலை வகிப்பது விராட் கோலிதான்.

சாதனை.

ஒருநாள் கிரிக்கெட்டில் தனது 49 சதங்களை எட்ட சச்சின் டெண்டுல்கர் 452 இன்னிங்ஸ் விளையாடினார் என்றால், தனது 50 சதங்களை 279 இன்னிங்ஸில் விராட் கோலியால் எட்ட முடிந்திருக்கிறது. இரண்டும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விதமான பந்து வீச்சக்காரர்களை எதிர்கொண்டு பெற்ற ரன்கள் என்றாலும், கணக்கு என்று பார்த்தால் முன்னிலை வகிப்பது விராட் கோலிதான்.

சர்வதேச கிரிக்கெட்டில் கடந்த 15 ஆண்டுகளில் தன்னுடைய விடா முயற்சியாலும், தன்னம்பிக்கையாலும், உழைப்பாலும் எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு இன்று வரலாற்று சாதனை படைத்திருக்கிறார் விராட் கோலி. தனது 16-ஆவது வயதில் தந்தை மறைந்த அடுத்த நாள் கிரிக்கெட் மட்டையுடன் மைதானத்தில் களமிறங்கி, தன்னுடைய அணியைத் தோல்வியிலிருந்து காப்பாற்றியதில் தொடங்குகிறது விராட் கோலியின் மைதானப் போராட்டம்.

2008-இல் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான இந்திய கிரிக்கெட் அணிக்கு உலகக் கோப்பையை வென்றதில் ஆரம்பமானது விராட் கோலியின் சாதனைப் பயணம். அந்த வெற்றி அவருக்கு இந்திய அணியில் இடம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. அதற்குப் பிறகு அவரது அசுர வளர்ச்சி இந்திய கிரிக்கெட்டின் சூப்பர் ஸ்டார் நிலைக்கு அவரை உயர்த்தியது.

2013-இல் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் முதலிட பேட்ஸ்மேனாக உயர்ந்த பிறகு திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியமே கோலிக்கு ஏற்படவில்லை. 2014-இல் எம்.எஸ். தோனியைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டி கேப்டனாக உயர்ந்தார் விராட் கோலி. அவரது அடுத்தகட்ட வளர்ச்சியாக 2016-இல் ஒருநாள் கிரிக்கெட் அணித் தலைமையும் கிடைத்தபோது, இந்திய கிரிக்கெட்டில் 'கோலி யுகம்' தொடங்கியது.

அடுத்த சில ஆண்டுகள் விராட் கோலியின் பேட்டிங்கில் சற்று பின்னடைவு ஏற்பட்டது என்னவோ உண்மை. ஆனால், 2023 அவரது மீள்வரவு ஆண்டாக மாறியிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் இதுவரை ஆறு சர்வதேச சதங்கள் அடித்திருக்கிறார். நடந்து முடிந்த 20-20 உலகக் கோப்பையிலும், இப்போதைய ஒருநாள் உலகக் கோப்பையிலும் மிக அதிகமான ரன்கள் அடித்திருக்கும் இந்திய பேட்ஸ்மேன் விராட் கோலிதான்.

கிரிக்கெட்டை வெறும் விளையாட்டாகக் கருதாமல், தொழில்முறை அணுகுமுறையுடன் எதிர்கொள்ளும் விராட் கோலி, ஏனைய கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறார். தன்னுடைய உடல்கட்டைப் பாதுகாப்பதில் தீவிர கவனம் செலுத்தும் கோலி, இன்னும் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது இதே துடிப்புடனும் வேகத்துடனும் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் வலம் வருவார் என்பது உறுதி.

இதுவரை டெஸ்டிலும், ஒருநாள் போட்டியிலும், 20-20 போட்டியிலும் 80 சர்வதேச சதங்களை அடித்திருக்கும் விராட் கோலி, சச்சின் டெண்டுல்கரின் 100 சர்வதேச சத சாதனையை முறியடிக்கப் போவதையும் கிரிக்கெட் ரசிகர்கள் பார்க்கத்தான் போகிறார்கள்!

# வங்க தேசத்தில் கரையைக் கடந்தது 'மிதிலி' புயல்

**சென்னை, நவ. 17:** வங்கக் கடலில் உருவாகிய 'மிதிலி' புயல் வங்க தேசத்தின் கேப்புபாரா அருகே வெள்ளிக்கிழமை பிற்பகல் கரையைக் கடந்ததாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவிவந்த தாழ்வு மண்டலம் 'மிதிலி' புயலாக வலுவடைந்தது. வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து வந்த நிலையில், வெள்ளிக்கிழமை இரவு கரையைக் கடக்கும் என்ற கணித்திருந்தனர். ஆனால், புயல் அதிவேகமாக நகர்ந்து, வெள்ளிக்கிழமை மதியம் 3.30 மணி அளவில் வங்க தேசத்தின் கேப்புபாரா அருகில் கரையைக் கடந்ததாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல் கரையைக் கடந்தபோது அந்தப் பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் இலங்கையை ஒட்டி நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி தொடர்ந்து நீடிக்கிறது. இதன் காரணமாக, சனிக்கிழமை (நவ. 18) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

**மழை அளவு:** வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): நாலுமுக்கு 100, ஊத்து, கன்னடியன் அணைக்கட்டு தலா 90, காக்காச்சி 80, மாஞ்சோலை 70, களக்காடு (திருநெல்வேலி), சிவலோகம் (கன்னியாகுமரி) தலா 60, அம்பாசமுத்திரம், பாபநாசம், மணிமுத்தாறு (திருநெல்வேலி), பேச்சிப்பாறை (கன்னியாகுமரி) தலா 50.

EVA STALIN IAS ACADEMY

# தற்சார்பு பொருளாதாரத்துக்கு உள்நாட்டுத் தொழில்கள் மிகப் பெரிய பங்களிக்கும்

## குடியரசுத் தலைவா் திரெளபதி முா்மு

**புது தில்லி, நவ. 17:** தற்சார்பு மிக்க, போட்டி நிறைந்த பொருளாதாரத்துக்கு உள்நாட்டுத் தொழில்கள் மிகப் பெரிய பங்களிக்கும் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

இந்திய ராணுவத் தளவாட ஆலை அதிகாரிகள் மற்றும் இந்திய பாதுகாப்பு கணக்கு சேவை பயிற்சி அதிகாரிகளிடையே அவர் தில்லியில் வெள்ளிக்கிழமை பேசியது:

மத்திய அரசு கடந்த சில ஆண்டுகளில் சில கொள்கை முன்முயற்சிகளை எடுத்துள்ளது. ராணுவத் தளவாடங்களின் உள்நாட்டு வடிவமைப்பு, வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்க சீர்திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது.

இந்தியா வளர்ந்த தேசமாக உருவெடுப்பதற்கான நோக்கத்தை நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ளது. தற்சார்பு மிக்க, போட்டி நிறைந்த பொருளாதாரத்துக்கு உள்நாட்டுத் தொழில்கள் மிகப் பெரிய பங்களிக்கும்.

வளர்ந்த தேசமாக உருவெடுப்பதற்கான நோக்கத்தை எட்டுவதில் தற்சார்பு இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம், ஸ்டார்ட் அப் இந்தியா, தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் பங்களிக்கின்றன.



பாதுகாப்புத் துறையில் தற்சார்பை எட்டுவதற்காக உள்நாட்டுத் தொழிற்சாலைகளில் சாதனங்களைக் கொள்முதல் செய்வது, தொழில்துறை உரிமம் பெறும் நடவடிக்கைகளை எளிதாக்குவது, அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையை தாராளமயமாக்குவது, இரண்டு பாதுகாப்பு தொழில்துறை தாழ்வாரங்களை அமைப்பது, உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்த ஸ்ரீஜன் வலைதளம் உருவாக்கம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு கட்டமைப்புகளை உள்நாட்டு மயமாக்க அதிகாரிகள் துணை நிற்பார்கள். நாட்டின் பாதுகாப்பு உற்பத்தித் திறன்களை மேம்படுத்த அவர்கள் பாடுபடுவார்கள்.

கடந்த 2013-14இல் ரூ.686 கோடியாக இருந்த இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி 2022-23ஆம் ஆண்டில் ரூ.16,000 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதிகள் 85 நாடுகளை எட்டியுள்ளன. பாதுகாப்புத் தளவாடங்களின் வடிவமைப்பு மற்றும் வளர்ச்சியில் இந்தியா தனது திறனை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

சுமார் 100 தொழில் நிறுவனங்கள் ராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்கின்றன. டோர்னியர்-228 ரக விமானங்கள், பிரம்மாஸ் ஏவுகணைகள், பினாகா ராக்கெட்டுகள், லாஞ்சர்கள், ராடார்கள் உள்ளிட்ட ராணுவத் தளவாடங்களை இந்தியா தற்போது ஏற்றுமதி செய்கிறது.

எல்சிஏ-தேஜஸ், விமானம் தாங்கிக் கப்பல்கள் உள்ளிட்ட இந்தியாவின் உள்நாட்டுத் தயாரிப்புகள் அதிகரித்து வருகின்றன.

இளம் அதிகாரிகளான நீங்கள் முப்படைகளின் நிதிச் செயல்பாடுகளை நிர்வகிப்பதில் முக்கியப் பங்காற்றுவீர்கள். பாதுகாப்புத் துறையில் நிதி மேலாண்மையையும் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்துவதில் நீங்கள் பொறுப்பு வகிப்பீர்கள். பாதுகாப்பு அமைப்புகளின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையையும் நம்பகத்தன்மையையும் கொண்டுவர நீங்கள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

# 49% இந்திய நிறுவனங்கள் தரவுப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை: ஆய்வில் தகவல்

**புது தில்லி, நவ.17:** செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களால் இணையவழி பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடரும் நிலையில், 49 சதவீத இந்திய நிறுவனங்கள் தரவுப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என ஆய்வில் தெரியவந்துள்ளது.

சர்வதேச அளவில் 2 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் தனது முக்கியத் தரவுகளை கடந்த ஆண்டில் இழந்ததாகவும் 6 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் கடந்த 12 மாதங்களில் பல்வேறு முறை தகவல் இழப்பு பிரச்னையை எதிர்கொண்டதாகவும் அமெரிக்காவைச் சேர்ந்த 'ரூப்ரிக் ஜீரோ லேப்' என்ற தரவு பாதுகாப்பு நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழாண்டு ஜூன் 30 முதல் ஜூலை 11 வரை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள நிறுவனங்களின் தரவு பாதுகாப்பு குறித்து இந்நிறுவனம் ஆய்வு நடத்தியது. 'தரவு பாதுகாப்பின் நிலை: நிச்சயமற்ற எதிர்காலத்தைப் பாதுகாக்கப் பயணம்' என்ற தலைப்பில் அந்த ஆய்வின் முடிவுகள் . நிறுவனங்களின் தலைமை தகவல் அதிகாரி (சிஐஓ), தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி (சிஐஎஸ்ஓ), தகவல் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு துறை துணைத் தலைவர்கள், இயக்குநர்கள் ஆகியோரிடம் தரவு பாதுகாப்பு குறித்த கேள்விகள் கேட்கப்பட்டன.

இந்தியாவைச் சேர்ந்த நிறுவனங்களில் 49 சதவீத அதிகாரிகள், தங்கள் நிறுவனங்களின் தரவு கொள்கைகளில், தரவு பாதுகாப்பு குறித்த அம்சம் இடம்பெறவில்லை என ஆய்வின் போது தெரிவித்தனர்.

இணையவழி குற்றங்கள் தங்கள் நிறுவனங்களின் தரவுகளுக்குப் பெரும் ஆபத்தாக உள்ளதாக 54 சதவீதம் பேர் பதிலளித்த வேளையில், அதிகரித்து வரும் தரவுகளுக்கு ஈடாக, அவற்றைப் பாதுகாப்பதில் தங்களுடைய திறன் பின்தங்கியிருப்பதாக 34 சதவீதம் பேர் தெரிவித்தனர்.

செயற்கை நுண்ணறிவு பயன்பாடு முக்கியத் தரவுகளைப் பாதுகாப்பதில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என 54 சதவீத இந்திய நிறுவனங்கள் நம்பிக்கை தெரிவித்த வேளையில், இது எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாது என 24 சதவீதம் நிறுவனங்கள் தெரிவித்தன.

**தெளிவான திட்டம் அவசியம்:** இது தொடர்பாக ரூப்ரிக் ஜீரோ லேப்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஸ்டீவன் ஸ்டோன் கூறுகையில், 'இன்றைய தகவல் ஊடுருவல் செயல்பாடுகள் வணிகச் செயல்பாடுகளின் முடக்கத்துக்கு வழிவகுக்கும் என்பதைக் கண்டறிந்துள்ளோம்.

நிறுவனங்கள் தங்கள் தரவுகளைப் பாதுகாக்க, இணையவழி அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தயாராகுவது, தாக்குதலுக்கு உள்ளானால் அவற்றிலிருந்து மீள்வது குறித்து தெளிவான திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்' என்றார்.

EVA STALIN IAS ACADEMY